[2016 ஜனவரி 21

முற்பகல் 10—40

6—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***51211—திரு. சி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்து தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.*

திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், இப்போது பரிசீலனையில் இல்லையென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, மீண்டும் பரிசீலிக்க வேண்டும். எங்களுடைய பகுதியிலே மலைவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுடைய பிள்ளைகள் அந்தப் பகுதியிலே அதிக அளவில் படிப்பதால், பள்ளிப் படிப்பை முடித்தவுடனே மாணவர்கள் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியில் சேருவதற்கு வசதியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு சென்று, எங்களுடைய ஓமலூர் தொகுதியில் இந்தக் கல்லூரியை அமைக்க ஆவன செய்ய வேண்டுகிறேன். நன்றி.*

2016 ஜனவரி 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஓமலூர் பகுதியில் புதிதாக அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி வேண்டுமென்றும், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார். அவருடைய கருத்தினை ஏற்று, அவருடைய கோரிக்கை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.*

திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி தொகுதி, ஆலங்குளம் ஒன்றியம், ஊத்துமலை ஊராட்சியில் பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியை அமைக்க அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்றால் அது கிராமப் பகுதியாக இருந்தால், ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அதோடுமட்டுமல்லாமல், தொடரும் செலவு என்று எடுத்துக் கொண்டால், சுமார் 14 கோடியே 74 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தொடரும் செலவு என்பது ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கான சம்பளம் வழங்குவதாகும். தொடராச் செலவினம் என்று எடுத்துக் கொண்டால், அதற்கு*

37 கோடியே 2 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. தொடராச் செலவினம் என்பது இயந்திரங்கள் 8 இலட்சம் ரூபாய் அளவிற்கு வாங்க வேண்டும்; கணினிகள் வாங்க வேண்டும்; அறைகலன்கள் வாங்க வேண்டும்; நூலகத்திற்கான புத்தகங்கள் வாங்கவேண்டும்; கட்டடங்கள் கட்டிட வேண்டும். ஆக, ஒரு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்க வேண்டுமென்றால், அரசுக்குச் செலவினமாக 56 கோடியே 94 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. கிராமப்புறமாக இருந்தால், கூடுதலாக ஐந்து ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. அந்தவகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இதுவரையில் இல்லாத அளவிற்கு கடந்த ஐந்து ஆண்டுகளில் 11 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, மாணவர் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகிறது. அந்தவகையில், நீங்கள் இருக்கிற உங்களுடைய பகுதியில், இந்தத் தேவைகளெல்லாம் நிறைவேறுகிற காலகட்டத்தில், அரசு அதைப் பரிசீலனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

நியாய விலைக் கடை கட்டடம்

*__57887__—**திரு. க. பாண்டியராஜன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், இனாம்ரெட்டியபட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?